2011 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகளில் மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய அறிவுரையின்பேரில் அனுமதி கொடுக்கப்பட்டு, அந்த மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

புதிய தேர்

***1395—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி அருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சீராக இல்லாத தேர்கள், சிதிலமடைந்த கோயில்கள் எல்லாம் சீரமைத்துத் தரப்படும் என்ற கருத்தினை இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோவிலுக்குப் புதிதாக மரத்தேர் செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 29–6–2011 அன்று திறக்கப்பட்டு கோயம்புத்தூர் இணை ஆணையர் அலுவலக பரிசீலனையில் உள்ளது. விரைவில் அங்கீகாரம் வழங்கி பணி துவங்கப்படும் நிலையில் உள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லையென்று சொல்லுவதில்லை" என்ற பாடலுக்கொப்ப, எங்கள் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் தொகுதி மக்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றபொழுது, இல்லையென்று எப்போதுமே கூறியதே இல்லை என்பதை இந்த அவையிலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலானது, 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான, பிரசித்திபெற்ற கோயிலாகும். இங்கே, வருடா, வருடம் 'குண்டம்' மற்றும் 'தேர்த் திருவிழா' விமரிசையாக நடைபெற்று வருகிறது. இதுவரையில் இந்தக் கோயில் தேரோட்டம் நின்றதே இல்லை. சுற்றியுள்ள 50 கிராமங்களிலுள்ள மக்கள் இந்தத் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டு வருகின்றார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, தேர் பழுதடைந்துவிட்டது எனக் கூறி தேரைச் செப்பனிடாமல் தேரோட்டத்தை நிறுத்திவிட்டனர். இந்தச் செயலானது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தந்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கோயிலுக்குப் புதிதாக தேர் செய்ய உத்தரவு வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை மாண்புமிகு தமிழகத்தின் ஈடு இணையற்ற முதல்வர் எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன். இதுவரை நீங்கள் துணைக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. இன்று உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியில் தொன்மை வாய்ந்த பேர்ப்பனியான்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள அனந்தீஸ்வரர் திருக்கோயிலில் பல்லாண்டு காலமாக தேர் பழுதடைந்துள்ளது.

2011 ஆகஸ்ட் 23]

அந்தத் தேரினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு புதுப்பித்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே, அனைத்துக் கோயில்களிலுள்ள தேர்களும் திருப்பணி செய்யப்படும் என்ற உறுதியை இங்கே அளித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தத் தேர் சீரமைத்துத் தரப்படும் என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள், நீங்களும் இதுவரை துணைக் கேள்வி கேட்கவில்லை. அதனால் உங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொகுதி ஸ்ரீரங்கம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதி ரிஷிவந்தியம் தொகுதியாகும். அந்த ஸ்ரீரங்கம் கோயில் உருவாவதற்கு முன்பாகவே, ஆதி திருவரங்கம் என்ற கோயில் உருவாகியிருக்கிறது. அங்கே தேர் இல்லை. புதிய தேர் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தேர் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படி, அவர்களுடைய கேள்வி பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கால்வாய்

*4416—**திரு. ரா. சரத்குமார்:**
திரு. பி.ஜி. இராஜேந்திரன்:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஜம்பு நதியில் மேல்மட்டக் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜம்பு நதி மற்றும் ராமநதி உபரி நீர் மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்திற்கு ரூ.887 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க நான் விட்டுக்கொடுக்கக் காத்திருக்கிறேன். ஏனென்றால், பெரும்பாலான பகுதிகள் அவருடைய தொகுதியிலே வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் முதலில் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. பி.ஜி. இராஜேந்திரன், முன் வரிசையிலுள்ள திரு. ரா. சரத்குமார் முதலில் பேசிவிடட்டும். (சிரிப்பு) நீங்கள் முதலில் பேசிவிடுங்கள்.*